# காணுமல்போவோர் பற்றி விசாரணை செய்யுமாறு

## அமெரிக்கா கோரிக்கை

(வாஷிங்டன்)
இலங்கையில் நடைபெறும் நீதிக்கு புறம்பான கொலைகளையும், காணுமல் போவோர் பற்றியும் விசாரணை நடாத்துமாறு அமெரிக்க இராஜாங்க அமைச்சு கோரியுள்ளது.
இந்தக்கோரிக்கையை மேற்படி அமைச்சு அமெரிக்காவின்
(4ம் பக்கம் பார்க்க)

## முல்லை - வவுனியா பகுதியில் வலுவடையும் புலிகளின் தாக்குதல்

[கொழும்பு]
முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்திருக்குமிடையில் தொடர்ந்து மோதல்கள் இடம்பெற்று வருவதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.
இப்பகுதியில் இராணுவ
(4-ம் பக்கம் பார்க்க)

## 16 சடலங்கள் மட்டும் மீட்பு

[வவுனியா]
வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த கோழியகுளம் பகுதியில் விடுதலைப்புலிகளுக்கும் அரச படையினருக்குமிடையே நடைபெற்ற கடும்மோதலில் 16 சடலங்கள் கண்டெடுக்கப்பட்டதாக உத்தியோகபூர்வ செய்திகள் தெரிவிக்கின்றன.
காலையில் 14 சடலங்களும் பி.ப. 2 சடலங்களும் கண்டெடுக்கப்பட்டதாகவும் இச்சமயத்தில் பெருமோதல்
(4-ம் பக்கம் பார்க்க)


விலை ரூபா 4-50

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 83 சித்திரை 24 ஸ்ரீவசம் 21 இதழ்: 86
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 7-5-1991


★ மடு கோயில் அகதி முகாமில்

# உதவிப்பணியில் ஈடுபட்டுள்ள பிரெஞ்சு குழு வாபஸ்பெறும்?

## அரச விமானப் படை தாக்குதலின் எதிரொலி

(கொழும்பு)
மடுக்கோயில் பகுதியில் அமைந்திருக்கும் அகதிகள் முகாமில் உதவிப் பணிகளில் ஈடுபட்டிருக்கும் பிரெஞ்சு நிவாரணக்குழு அந்தப் பணியிலிருந்து தன்னை முற்றாக விலக்கிக் கொள்ளுமென தெரியவருகிறது.

வவுனியா மாவட்டத்தில் அண்மையில் ஸ்ரீலங்கா விமானப்படையினர் நடத்திய விமானத் தாக்குதலின்போது சம்பந்தப்பட்ட உதவிப் பணி குழுவைச் சேர்ந்த உதவியாளர்கள் காயமடைந்ததை ஆட்சேபித்தே இந்த முடிவு எடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

மேற்படி பகுதியில் இடம்பெற்ற விமானத்தாக்குதலில் குறிப்பிடப்பட்ட பிரெஞ்சு நிவாரணக் குழுவின் உதவியாளர்கள் காயமடைந்ததை அந்தக்குழுவினர் மிகக்கடுமையாகக் கருத்திற்கொண்டுவிட்டனர்.
மடுக்கோயில் பகுதியில் அமைந்துள்ள அகதி முகாம்களில் உதவிப் பணிகளில் ஈடுபட்டிருந்த அந்தக் குழுவின் பிரதிநிதிகள் இனிமேலும் இந்தப் பணிகளில் ஈடுபடமாட்டார்களெனவும் அதிலிருந்து அவர்கள் விலகிக் கொள்வார்களெனவும் அறிய
(4-ம் பக்கம் பார்க்க)

வவுனியா மோதலில்

## இரு அதிகாரிகள் உட்பட 15 படையினர் மரணம்

- அரசு அறிவிப்பு

(கொழும்பு)
வவுனியா மாவட்டத்தில் உள்ள கோயிற்குளம் பகுதியில் விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் நடத்திய தாக்குதலில், இரண்டு சிறிலங்கா இராணுவ அதிகாரிகள் உட்பட பதினைந்து படையினர் கொல்லப்பட்டதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.
(4-ம் பக்கம் பார்க்க)

### பென்சன் வவுச்சர்கள்

(யாழ்ப்பாணம்)
ஏப்ரல் மாதப் பென்சன் வவுச்சர்கள், யாழ். செயலகத்திற்கு நேற்று வந்து சேர்ந்துள்ளன.
'குமண' கப்பலில் இந்த பென்சன் வவுச்சர்கள் கொண்டுவரப்பட்டுள்ளன.
(4-ம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகளின் வெற்றி சுதந்திர தேர்தலை உருவாக்கும் - அன்ரன் பாலசிங்கம்

(வாஷிங்டன்)
வடக்கு-கிழக்கு யுத்தத்தில் விடுதலைப்புலிகளின் பூரண வெற்றி சுதந்திரமானதொரு தேர்தலுக்கு வழிகோலுமென விடுதலைப்புலிகள் பேச்சாளர் திரு. அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.
அமெரிக்க சஞ்சிகையான 'நியூஸ் வீக்கிற்கு' அளித்த பேட்டி ஒன்றில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
இதேவேளை, வடக்குகிழக்கு பிரச்னைக்கு தீர்வுகாண யாரா
[4-ம் பக்கம் பார்க்க]

### சிப்பாய் பலி!

[கொழும்பு]
அநுராதபுரத்திலுள்ள ஹொறவப்பொத்தானை பகுதியில் நேற்று இராணுவச்சிப்பாய் ஒருவர் கொலைசெய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.
இவர் யாரால் கொலைப்பட்டார் என்பது பற்றிய தகவல்கள் தெரிவிக்கப்படவில்லை.

## தாய்வானிலிருந்து 6000 இலங்கையர் நாடு கடத்தப்படுவர்

(தைப்பே)
தாய்வானில் சட்டவிரோதமாகத் தங்கியிருக்கும் 6,000 இலங்கையர்களும் மிகவிரைவில் நாடு கடத்தப்படவுள்ளனர்.
இவர்கள் அனைவரும் சட்டவிரோதமாக தாய்வானுள் நுழைந்ததுடன் தொழில் பார்த்து வருவதாகவும் தாய்வான் அரசு அறிவித்துள்ளது. இவர்களை நாடு கடத்தும் முயற்சி துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறதாம்.
தாய்வானுடன் இலங்கை ராஜதந்திரத் தொடர்பு எதனையும் கொண்டிருக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (சி)

## வேலணை கோட்டத்திலுள்ள பாடசாலைகள் யாவும் யாழ். நகரில் நடைபெறும்

(யாழ்ப்பாணம்)
வேலணைக் கோட்டத்தின் கீழ் இயங்கும் பாடசாலைகள் யாழ்ப்பாணத்தில் மாலை நேரங்களில் இயங்குவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.
(4-ம் பக்கம் பார்க்க)

## ஆகஸ்ட்டிசம்பர் மாதங்களில் க. பொ. த. பரீட்சைகள்

(கொழும்பு)
பரீட்சை திணைக்களத்தினால் இவ்வருடம் நடாத்தப்படும் க. பொ. த. உயர்தரப் பரீட்சையும், க. பொ. த. சாதாரண தர பரீட்சையும் ஆகஸ்ட் டிசம்பர் மாதங்களில் நடைபெறுமென பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.
க. பொ. த. உயர்தரப் பரீட்சை ஆகஸ்ட் 3-ம் திகதி முதல் 27-ம் திகதி வரை நடைபெறும்.
க. பொ. த. சாதாரண பரீட்சை டிசம்பர் 9-ம் திகதி
(4-ம் பக்கம் பார்க்க)

## க. பொ. த. (உயர்தர) வகுப்புகள் 15ம் திகதி ஆரம்பம்

[யாழ்ப்பாணம்]
புதிய க. பொ. த. உயர்தர வகுப்புகள் இம்மாதம் 15-ம் திகதி யாழ். மாவட்ட உயர்தர பாடசாலைகளில் ஆரம்பிக்கப்படும் என்று யாழ். கல்விப்பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.
க. பொ. த. சாதாரண
(4-ம் பக்கம் பார்க்க)

## கத்தியால் குத்தி தாலிக்கொடி அபகரிப்பு

[பூநகரி]
பூநகரியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி கணவனுடன் சைக்கிளில் வந்து கொண்டிருந்த பெண் ஒருவர் தாலிக்கொடியைப் பறிகொடுத்துள்ளார்.
கடந்த 4ம் திகதி அதிகாலை 4 மணியளவில் நாவற்குழிச் சந்திக்கு அண்மையிலுள்ள ஆயிலிப் பிட்டியடியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. பூநகரி செட்டிய குறிச்சியை சேர்ந்த மகாலிங்கம் விஜயலக்ஷ்மி என்ற பெண்ணே தமது 4 பவுண் தாலிக்கொடியை இழந்தவ
(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### சோபிதா புத்தகசாலை

யாழ். நகரில் நியாய விலைக்கு அப்பியாசக்கொப்பிகள், பாடநூல்கள், பாடசாலை உபகரணங்கள், மீரா வெளியீடுகள் அனைத்துக்கும் சிறந்த ஸ்தாபனம் சோபிதா புத்தகசாலை, 363 கே. கே. எஸ். வீதி (முட்டாசுக்கடைச் சந்தி), யாழ்ப்பாணம்,

(சி 4670)

### முக்கிய கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மறைவட்ட பொது நிலைக்கழகத்தின் மாதாந்த கூட்டம் இம்மாதம் 11ந் திகதி யாழ். ஆயர் இல்லத்தில் நடைபெறவிருக்கிறது.

மேற்படி கூட்டத்தில் அருட்திரு ஆபரணம் சிங்கராயரை குருத்துவ கடமைகளை நிறைவேற்றுவதிலிருந்து நிறுத்தி வைக்கப்பட்டது சம்பந்தமான விடயம் முக்கியமாக விவாதத்திற்கு எடுக்கப்படவிருக்கிறது.

## முனீஸ்வரன் வீதி கடைகள் உடைக்கப்பட்டு பல பொருட்கள் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

கடந்த முதலாம் திகதி இரவு யாழ். நகரிலுள்ள முனீஸ்வரன் வீதியில் அமைந்துள்ள நீர்இறைக்கும் இயந்திர உதிரிப்பாகங்கள் விற்பனை செய்யும்கடை ஒன்று உடைக்கப்பட்டு அங்கிருந்த பல ஆயிரம ரூபா பெறுமதியான உதிரிப்பாகங்கள், நீர்இறைக்கும் இயந்திரம், பணம் உட்பட வேறும் சில பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

இதே கடைக்கு அருகிலிருந்த றேடியோ திருத்தும் கடை ஒன்றிலிருந்தும் சுமார் 10 ஆயிரம் ரூபா? பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேபோல மறுநாள் மதுபான விற்பனை நிலையம் ஒன்று உடைக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டதாகவும் ஆனால் அந்த முயற்சி பலனளிக்கவில்லை எனவும் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## காரைநகர் வைத்தியசாலை இயங்கவில்லை!

(பண்டத்தரிப்பு)

காரைநகர் அரசாங்க வைத்தியசாலை அப்பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையை அடுத்து இயங்காத நிலையில் உள்ளது.

இங்கு கடமையாற்றி வந்த ஊழியர்கள் வட்டுக்கோட்டை அரசினர் கிராமிய வைத்தியசாலை, தெல்லிப்புரம் அரசினர் மத்திய மருந்துச்சாலை ஆகியவற்றில் தற்போது தற்காலிகமாக கடமையாற்றி வருகின்றனர்.

இதேவேளை ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலையில் இருந்து இடம்பெயர்ந்துவந்த ஊழியர்களில் சிலர் வட்டுக்கோட்டை மற்றும் பண்டத்தரிப்பு வைத்தியசாலைகளில் தற்காலிகமாக கடமையாற்றி வருகின்றனர்.

[72]

### திருநாவுக்கரசு நாயனார் குருபூசை

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய அதிபர் கணேசதாசன் தலைமையில் நாளை 8ம் திகதி புதன்கிழமை மாலை திருநாவுக்கரசு நாயனார் குருபூசை நடைபெறும்.

பாடசாலையில் தீவுப்பகுதி அகதிகள் தஞ்சம் புகுந்துள்ளதால் கொழும்புத்துறைமேற்கு அருள்மிகு ஸ்ரீ விநாயகமூர்த்திப்பிள்ளையார் ஆலயத்தின் முன் குருபூசை நடைபெறஉள்ளது.

(154)

### காற்றினால் வாழைகள் சேதம்

(பண்டத்தரிப்பு)

வலிகாமம் மேற்குப் பகுதியில் கடந்த சில தினங்களாக வீசிவரும் பலத்த புயல்காற்றினால் வாழைத் தோட்டங்களிலுள்ள வாழைகள் முறிந்து விழுந்துள்ளன. முற்றாத நிலையில் வாழைக் குலைகளுடன் பல வாழைகள் நிலத்தில் வீழ்ந்துள்ளன.

(72)

### பூசைகள் இல்லை

(வேலணை)

கடந்த எட்டுத் தினங்களாக தீவுப் பகுதிகளில் உள்ள ஆலயங்களில்பூசைகள் நடைபெறவில்லை.

### உலகத் தமிழ் பண்பாட்டு இயக்க நிர்வாகிகள்

(கொழும்புத்துறை)

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் இலங்கைக் கிளை வருடாந்தப் பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட நடப்பு வருட நிர்வாகிகள் விபரம் பின்வருமாறு: தலைவர்: ஆ சண்முகலிங்கம், உபதலைவர் வே. கே தனபாலன், இணைச் செயலாளர்கள்: எஸ். பரமநாதன் சி. சி. வரதராசா, பொருளாளர், இ. ராஜ்குமார்.

மற்றும் செயலவை உறுப்பினர்களாக எட்டுப்பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

## கல்வி நிர்வாக சேவை பரீட்சை பின்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

இலங்கை கல்வி நிர்வாக சேவை IIIக்குரிய மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சை திகதி நிர்ணயிக்கப்படாது பிற்போடப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தலைவர் திரு. த. மகாசிவம் இத்தகவலைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

இலங்கை கல்வி நிர்வாக சேவை வகுப்பு 111 க்கான திறந்த போட்டிப் பரீட்சை கடந்த மாதம் வடக்கிலிருந்து ஒரு பரீட்சார்த்தியேனும் தோற்றாத நிலையிலும், கிழக்கிலிருந்து பெரும்பாலான பரீட்சார்த்திகள் தோற்றாத நிலையிலும் ஸ்ரீலங்கா அரசினால் நடாத்தி முடிக்கப்பட்டமை தமிழ் மாணவர்களின் கல்வியை அழிக்கும் ஸ்ரீலங்கா அரசின் திட்டமிட்ட சதிச் செயல்களில் ஒன்றாகும்.

இக்குறைபாட்டை நீக்குவதற்கு விசேசபரீட்சை ஒன்றை வடக்கு கிழக்கில் பரீட்சை நிலையங்கள் அமைத்து நடாத்தும்படி ஜனாதிபதி, கல்வி அமைச்சர், கல்வி ராஜாங்க அமைச்சர், பரீட்சை ஆணையாளர் கல்விச் சேவை ஆணைக்குழுத் தலைவர் ஆகியோருக்கு பொதுச் செயலாளரினாலும் இப்பரீட்சைக்கு தோற்றும் 500 க்கு மேற்பட்ட பரீட்சார்த்திகளினாலும் ஒப்பமிடப்பட்ட மகஜர் அனுப்பப்பட்டுள்ளது.

இதேபோன்று இலங்கை கல்வி நிர்வாக சேவை வகுப்பு IIIக்கான மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சையைக் கொழும்பில் மாத்திரம் நடாத்தாது வடக்கு கிழக்குப் பகுதிகளிலும் பரீட்சை நிலையங்கள் அமைத்து பரீட்சையைநடாத்தும்படியும், பரீட்சையை க. பொ. த. உயர்தர விசேட பரீட்சை தினங்களிலோ அல்லது விடைத்தாள்கள், திருத்தும் தினங்களிலோ நடாத்தாது வேறுதிகதிகளில் நடாத்துமாறும் கோரப்பட்டுள்ளது.

இம்மகஜர் சமர்ப்பிக்கப்பட்டமையால் இலங்கை கல்வி நிருவாக சேவை IIIக்குரிய மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சை திகதி நிர்ணயிக்கப்படாது பிற்போடப்பட்டுள்ளதாக தகவல் கிடைத்துள்ளதென பொதுச்செயலாளர் மகாசிவம் தெரிவித்துள்ளார்.

## மாணவரை விவசாயத்தில் ஊக்குவிக்க ஏற்பாடு

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்ட பாடசாலை மட்டத்தில் வீட்டுத்தோட்டத்திட்டத்தை நடைமுறைப்படுத்த யாழ் கல்வித் திணைக்களம் சகல நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது.

இந்தத்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக சகல பாடசாலைகளும் விவசாயக் கழகங்களை ஆரம்பிக்குமாறு பாடசாலை அதிகாரிகளுக்கு கல்வித் திணைக்களம் சுற்றறிக்கை அனுப்பி உள்ளது.

சகல மாணவர்களையும் விவசாயத்தில் ஊக்குவிக்கும் பொருட்டு வீட்டுத்தோட்டப் போட்டிகள் நடாத்துமாறும், பிரதி மாதமும் பயிர்செய்கையை மதிப்பீடு செய்யுமாறும் இறுதியில் விவசாயக் கண்காட்சி நடாத்தி விளைபொருட்களை சந்தைப்படுத்த உதவுமாறும் விவசாய ஆசிரியர்களை யாழ் கல்விப்பணிப்பாளர் திரு இரா. சுந்தரலிங்கம் கேட்டுள்ளார்.

[154]

## விமானத்தாக்குதல் 6 மினி பஸ் சேதம்

(பூநகரி)

வவுனியா பகுதியில் கடந்த வாரம் இடம் பெற்ற கடும் விமானத்தாக்குதலில் 6 மினி பஸ்கள் பலத்த சேதமடைந்துள்ளன.

இந்த மினிபஸ்களின் மேல் கூரைகளும் கண்ணாடிகளும் நொருங்கியுள்ளதுடன் பல பெருமளவு சேதமுற்றுள்ளன.

இவை தற்போது பூநகரியிலும், கிளிநொச்சியிலும் தரித்து நிற்கின்றனவாம்.

(23)

## இராசி பலன்

07-05-1991

செவ்வாய்க்கிழமை

அட்டமி பி. ப. 3- 0 வரை, அவிட்டம் முழுவதும், சித்தயோகம் இராகுகாலம் பகல் 2–55 முதல் 4–25 வரை, சுப நேரம் காலை 10-25 முதல் 11–55 வரை.

மேடம்:- புதிய சந்திப்பு, பணப் புளக்கம், தொழில் சிறப்பு.

இடபம்:- காரிய அலைச்சல், மனைறமுக தொல்லை, அவ

[3-ம் பக்கம் பார்க்க]

## கடற்றொழில் அபிவிருத்தி 15 லட்சம் ரூபா ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட இவ்வாண்டு பன்முக வரவு செலவுத் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்திலுள்ள கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இம்முறை 15 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட கடற்றொழில் விரிவாக்க திணைக்களத்தின் அனுசரணையுடன் கடற்றொழிலாளர்களுக்கு வருமானம் அளிக்கும் திட்டத்தின் அடிப்படையில் இருபது கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் உபகரணங்கள் வழங்கப்படவிருக்கிறது.

[153]

### முத்திரையிடப்படாத தராசு படிகள்

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்டத்திலுள்ள பிரபல சந்தைகளுள் ஒன்றான பண்டத்தரிப்பு சந்தையில் மரக்கறி சில்லறையாக விற்பனை செய்யும் சிறு வியாபாரிகள் பயன்படுத்தும் தராசுகளில் பல பழுதடைந்தவைகளாகவும், ஒட்டை உடைசல்கள் உள்ளனவாகவும் காணப்படுகின்றன. அத்துடன் முத்திரை வைக்கப்படாத தராசுப்படிகளும் பயன்படுத்தப்பட்டுவருவதாக பாவனையாளர்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

(72)

### சுகாதாரச் சீர்கேடு

(கொக்குவில்)

வடபிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்கம் சுருட்டு உற்பத்தி நிலையங்களிலுள்ள சுகாதார சீர்கேடுகளை கவனித்து ஏற்ற நடவடிக்கைகள் செய்யும்படி சகல மாவட்ட சுகாதார அதிகாரிகளையும் கடிதமூலம் கேட்டுள்ளதாக சங்கத் தலைவர் திரு. செ. உருத்திரா தெரிவித்துள்ளார்.

(135)

### மாதாந்த உதவிப்பணம்

(கொழும்புத்துறை)

யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உற்பட்டதபால் அலுவலகங்களில் கடந்த வருடம் டிசம்பர் மாதத்திற்குரியதும் இவ்வருடத்திற்குரிய மாதாந்த உதவிப்பணம் வழங்கப்பட்டுவருகிறது.

இருமாதங்களுக்குரிய இப்பணத்தைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் தத்தமது பகுதியில் உள்ள தபாற்கந்தோரில் இம்மாதம் 25ம் திகதி சனிக்கிழமை நேரில் சென்று பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

(154)

### மாதர் சங்க நிர்வாகிகள்

(மானிப்பாய்)

கைதடி மேற்கு பராசக்தி மாதர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் சங்க மண்டபத்தில் நடைபெற்றபோது நடப்பு வருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்

தலைவர்: திருமதி ப. மயில்வாகனம், உபதலைவர்: ச. மகேஸ்வரி, செயலாளர் செல்வி க. கலாதேவி, உபசெயலாளர்: செல்வி வே. உதயராணி, பொருளாளர்: திருமதி வா. தயாளன்.

இத்துடன் 7 பேர் கொண்ட நிர்வாக உத்தியோகத்தர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

### இடமாற்றம்

(கொழும்புத்துறை)

கிராம அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தர் பதினொரு பேர் அண்மையில் யாழ் மாவட்டத்திலிருந்து பிற மாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

(154)

### பதவி உயர்வு

உடுவில் வலிகாமம் தெற்கு பிரதேச அபிவிருத்திசபை உடுவில் உப அலுவலக எழுதுனர்களான திரு. கு. கருணாநிதி, திரு. தி. விநாயமூர்த்தி ஆகியோர் பதவியுயர்வுடன் ஊர்காவற்றுறை பிரதேச சபைக்கும் யாழ்ப்பாணம் மாநகர சபைக்கும் இடமாற்றம் பெற்றுள்ளனர்.

அதேபோல் இவ்வலுவலக வருமான மேற்பார்வையாளர் திரு. அ. வைகுந்தநாதன் ஏழாலை உப அலுவலகத்துக்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

[109]

யாழ். வர்த்தகர் சங்கம்

பொதுக்கூட்டம்

சங்கப் பொதுக்கூட்டம் 12-05-1991 ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு யாழ்/இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

உறுப்பினர்கள் 1991 தை மாதம் தொடக்கம் சந்தாப்பணம் செலுத்திய பற்றுச்சீட்டுடன் தவறாது சமுகம் கொடுக்கவும்.

சி. நமசிவாயம் பொதுச் செயலாளர் — க. வி. குலரத்தினம் தலைவர் (சி-4707)

# ★ தீவுப்பகுதி அகதிகளுக்கு அரசு வழங்கும் நிவாரணம் போதியதாக இல்லை

(யாழ்ப்பாணம்)

இராணுவ நடவடிக்கைகளினால் தீவுப்பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து அகதிகளாக யாழ். நகரில் பல முகாம்களில் தங்கியிருக்கும் பொது மக்களுக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்டுவரும் நிவாரணம் திருப்தியளிப்பதாக இல்லையென்று அகதிகள் தெரிவித்தனர்.

நாளொன்றுக்கு வயதுவந்தவர்களுக்கு 15 ரூபாவும் சிறுவர்களுக்கு 8 ரூபாவும் அரசாங்கத்தால் நிவாரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படுவதாகவும், இவை அரிசி, பருப்பு, சீனி, பால்மா போன்ற பொருட்களாகவே வழங்கப்படுவதாகவும் தெரியவந்துள்ளது.

இப்பொருட்களை சமைத்து உண்பதற்கு தேவையான பாத்திரங்களோ அல்லது விறகுகளோ கிடைப்பது மிக அரிது என்றும், அரச சார்பற்ற நிறுவனங்களினாலும் பொது மக்களினாலும் வழங்கப்படும் நிவாரணங்களினாலேயே அகதிகளின் உணவு பற்றாக்குறையை ஓரளவுக்கு சமாளிக்கக்கூடியதாக இருப்பதாக, அகதிகள் முகாம்களை பராமரித்துவரும் தொண்டர் ஒருவர் தெரிவித்தார். (வி)

## மூன்று பாடசாலைகளில் 850 குடும்பங்கள் தஞ்சம்

(கொழும்புத்துறை)

தீவுப் பகுதிகளில் ஏற்பட்டுள்ள இராணுவ நடவடிக்கையை அடுத்து கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம், கொழும்புத்துறை சென் ஜோசப் மகாவித்தியாலயம், கொழும்புத்துறை இந்துமகா வித்தியாலயங்களில் சுமார் 850 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் அகதிகளாக தஞ்சம் புகுந்துள்ளனர்.

ஊர்காவற்றுறை, கரம்பன், புங்குடுதீவு நாரந்தனை, சரவணை, புளியங்கூடல், சுருவில், நெருஞ்சிமுனை, அல்லைப்பிட்டி, மண்டைதீவு, மண்கும்பான், சாட்டி, காரைநகர் பகுதிகளைச் சேர்ந்தவர்களே தஞ்சமடைந்துள்ளனர். இப்பாடசாலைகளிலுள்ள அகதிகளுக்கு யாழ். புனர்வாழ்வுக் கழகத்தினர்களும், யாழ். உதவி அரசாங்க அதிபர் எஸ். நித்தியராசா ஆகியோர்கள் 3 பாடசாலைகளுக்கும் நேரில் சென்று அத்தியாவசிய உணவு வகைகளை விநியோகம் செய்து வருகின்றனர்.

யாழ் மாநகரசபை சுகாதாரப் பகுதியினரால் தினசரி தண்ணீர் வசதி, மலசலகூட வசதி, பாடசாலை துப்பரவு செய்யும் வேலைகள் செய்யப்பட்டுவருகிறது.

மாநகரசபை பொதுச் சுகாதாரப்பரிசோதகர் திரு. க. சபாபதிப்பிள்ளை தினசரி 3 அகதி முகாமுக்கும் நேரில் சென்று சகல பணிகளையும் மேற்பார்வை செய்துவருகின்றார். (154

## சைக்கிளை வாங்கியவர் யார்?

(நாவற்குழி)

006 AB 1441 என்ற இலக்க 'ஏசியா' சைக்கிளை விற்பனை செய்த கடை உரிமையாளர் அந்த சைக்கிளை வாங்கியவர் பெயர், விலாசம் போன்ற விபரங்களை உடனடியாக சாவகச்சேரி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிக் காரியாலயத்துக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (107)

# சூரிய வெப்பம் சென்னையில் அதிகரிப்பு

(சென்னை)

தமிழ்நாட்டுச் சென்னைப்பகுதியில் சூரிய வெப்பநிலை நேற்று முன்தினம் அதிகரித்து காணப்பட்டதாம்.

35 வருடங்களாக இது போன்று சூரிய வெப்பநிலை அதிகரித்துக் காணப்படவில்லை என்று அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

நேற்றும் நேற்று முன்தினமும் சென்னை மீனம்பாக்கம் பகுதிகளில் 42 7 டிக்கிரி சூரிய வெப்பம் பதிவாகியுள்ளது.

அக்கினி பகவானின் கோரத் தாண்டவம் இதுவென பொது மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனராம். (வி)

# பங்களாதேசை மீண்டும் புயல் தாக்கலாம்

(டாக்கா)

பங்களாதேசை அண்மையில் தாக்கிய புயல் அகோர மீட்பு பணி முடியும் முன் மீண்டும் பங்களாதேசை சூறாவளி தாக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக எச்சரிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் ஏற்பட்ட புயலினால் ஒன்றரை லட்சம் பேர் உயிரிழந்தனர். ஒரு லட்சம் பேர் காணாமல் போய்விட்டனர். ஒரு கோடிக்கும் மேற்பட்டவர்கள் தமது வீடுகளை இழந்துவிட்டனர்.

இந்நிலையில் மீட்புப்பணி பல சிரமத்தின் மத்தியிலும் நடைபெற்றுக்கொண்டிருக்கும் இவ்வேளையில் பங்களாதேசை மீண்டும் புயல் தாக்கலாமென நாடுமுழுவதும் எச்சரிக்கப்பட்டுள்ளது இதையடுத்து பல முன் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (சி)

# அகதி முகாம்களில் கண்நோய் பரவுகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ். நகர்ப்பகுதிகளிலுள்ள பல அகதி முகாம்களில் கண்நோய் மிக வேகமாக பரவி வருகிறது. 10க்கும் மேற்பட்டோருக்கு ஒவ்வொரு அகதி முகாம்களிலும் சிகிச்சை அளிக்கப்பட்டுவருகிறது.

சென். மேரீஸ் வித்தியாலயத்தில் தங்கியிருக்கும் அகதிகளில் 30க்கு மேற்பட்டவர்கள் கண்நோய்க்குள்ளாகி சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. அத்துடன் கடமையாற்றும் செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்கட்கும் கண்நோய் பரவியுள்ளது.

இருப்பினும் இந்நோயினை மேலும் பரவவிடாமல் தடுக்கும் முயற்சியில் செஞ்சிலுவைச் சங்க சுகாதாரப் பிரிவு தீவிரமாகச் செயல்பட்டுவருகிறது. (56)

## பண்டத்தரிப்பில் தஞ்சமடைந்தவர்களுக்கு லக்ஸ்பிறே விநியோகம்

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்பு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் இடம்பெயர்ந்து பண்டத்தரிப்புப் பகுதியில் தஞ்சமடைந்திருக்கும் அகதிகளுக்கு மொத்தம் 3 ஆயிரத்து 876 லக்ஸ்பிறே பால்மா பக்கட்டுகளை இவ்வாரம் வழங்கியுள்ளது

சங்கத்தின் பண்டத்தரிப்பு கிளை, மாதகல் கிளை, வடலியடைப்பு கிளை, சில்லாலைகிளை ஆகிய இடங்களில் வைத்து இடப்பெயர்ந்தோருக்கான "இ" பங்கீட்டு அட்டை சமர்ப்பித்தவர்களுக்கு இந்த பால்மா பக்கட்டுகள் வழங்கப்பட்டன.

ஒரு அங்கத்தவரை கொண்ட குடும்பத்துக்கு ஒரு பக்கட்டும் இரண்டு அங்கத்தவரைக் கொண்ட குடும்பத்திற்கு இரண்டு பக்கட்டும், மூன்றும் நான்கும் அங்கத்தவர்களைக் கொண்டுள்ள குடும்பத்திற்கு மூன்று பக்கட்டும், ஐந்தும் அதற்கு மேற்பட்ட அங்கத்தவர்களைக் கொண்டுள்ள குடும்பத்திற்கு நான்கு பக்கட்டும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளதாக சங்கத்தின் உயரதிகாரி ஒருவர் இதுபற்றி தகவல் தருகையில் தெரிவித்தார். [72]

## இராசி பலன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மதிப்பு.

மிதுனம்:- தொழில் விவகாரம், குடும்பமகிழ்ச்சி, தானதர்மம்

கடகம்:- அந்நியர் உதவி, விருந்துபசாரம், உல்லாசப் பயணம்.

சிங்கம்:- வாக்கு வசிகரம், கல்வி ஞானம், தொழில் லாபம்.

கன்னி:- பெரியோர்பகை, குடும்ப கஷ்டம், வீண் பிரச்சனை.

துலாம்:- கடன் சுமை, தொழில் நஷ்டம், பயணங்களால் செலவு.

விருச்சிகம்:- சுபகாரியச் செலவு, வேலைப்பளு, புதிய சிந்தனை.

தனுசு:- அதிகாரமேன்மை, தொழில் பாதிப்பு, குடும்ப பிரிவு.

மகரம்:- தெய்வீக செலவு, புதிய ஸ்தானம், குடும்பஉறவு.

கும்பம்:- பழி வாங்கல், குடும்பத்தகராறு, மனக்குழப்பம்

மீனம்:- தொழில்கஷ்டம், அறிஞர் சந்திப்பு, குடும்பச் சிறப்பு;

ஜோஸ்யர்

# தமிழ்நாடு தேர்தல் களம்

## வன்முறை ஏற்பட்டால்

எந்த ஒரு வாக்களிப்பு நிலையமும் வன்முறைச் சம்பவத்தினால் கைப்பற்றப்பட்டால், அந்த வாக்களிப்பு நிலையமுள்ள தொகுதி முழுவதற்குமான வாக்குசீட்டு எண்ணுவது நிறுத்திவைக்கப்படும் என தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

## 30 மத்திய காவலணி

தமிழ்நாட்டில் தேர்தல் பாதுகாப்புக்காக 30 மத்திய காவல் அணி வரவழைக்கப்படும் என்று தமிழக ஆளுநரின் ஆலோசகர் திரு. வி. ராமச்சந்திரன் தெரிவித்தார்.

## காவலணி நிறுத்தப்படும்

திருநெல்வேலி, கட்டப்பொம்மன், சிதம்பரனார் மாவட்டங்களில் ஒரு காவல் அணி அமர்த்தப்படும். இதற்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியாகியுள்ளன.

## தேர்தல் பகிஷ்கரிப்பு

தமிழ்நாட்டில் சில பகுதிகளில் குடிநீர் வசதியில்லையென்பதால் அப்பகுதிமக்கள் தேர்தலை பகிஷ்கரிப்பதென முடிவுசெய்துள்ளனர். இதுபற்றி ஆளுநர் ஆலோசகர் புதிய அரசு இவர்களுக்கான குடிநீர் வசதிகளை செய்துகொடுக்கும் என்றார்.

## புதிய திட்டங்கள்

இம்மாதம் 12ம் திகதிக்கு பின்னர் தமிழ்நாடு அரசின் புதிய திட்டம் எதற்கும் அனுமதி அளிப்பதில்லையென அரசு முடிவுசெய்துள்ளதாக ஆளுநர் ஆலோசகர் திரு. ராமச்சந்திரன் தெரிவித்தார்.

## வாக்குச் சீட்டுக்கள்

வாக்குச்சீட்டுக்கள் அச்சகங்களில் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. வாக்களிப்பு நிலையங்களுக்கு பலத்த பாதுகாப்புடன் கொண்டுசெல்ல ஏற்பாடு செய்யப்பட்டுவருகிறது

## 106 இடங்கள்

திருநெல்வேலி கட்டப்பொம்மன் மாவட்டங்களில் 106 இடங்களில் வன்முறை சம்பவங்கள் இடம்பெறலாம் எனக் கண்டறியப்பட்டதை தொடர்ந்து அந்த இடங்களுக்கு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

## 1848 சுயேச்சை வேட்பாளர்

தமிழ்நாட்டில் சட்டபேரவை 234 தொகுதிகளுக்கு 2234 பேர் போட்டியிடுகிறார்கள். 39 தொகுதிகளைக் கொண்ட மக்கள் அவைக்கு 461பேர் போட்டியிடுகின்றார்கள். 1848 பேர் சுயேட்சை வேட்பாளர்களாகும்.

## அதிக வேட்பாளர்

தமிழ்நாடு சட்டபேரவை தேர்தலில் முதன்முதலாகப் போட்டியிடும் பாட்டாளி மக்கள் கட்சியினர் அதிகவேட்பாளர்களை நிறுத்தியுள்ளனர்.

# கோதாவாரி ஆற்றில் விபத்து; படகு கவிழ்ந்து 85 பேர் பலி

(ஹைதராபாத்)

ஆந்திர பிரதேஷ் கோதாவாரி ஆற்றில் நிகழ்ந்த கோர படகு விபத்தில் 85க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் பலரை காணவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது

நேற்று முன்தினம் காலை, நிர்ணயிக்கப்பட்ட அளவை விட கூடுதலான பயணிகளை ஏற்றிச் சென்ற படகொன்று சோழவரம் அருகில் அகோதாவாரி ஆற்றில் கவிழ்ந்தது.

33 பெண்களும் 13 குழந்தைகளும் இந்த விபத்தில் இறந்துள்ளனர். படகில் சுமார் 150 பேர் பயணம் செய்தனர். (சி)

# 13 தமிழர்களை உடனடியாக பதவியில் சேர்க்க உத்தரவு

(கொழும்பு)

சுங்கப் பகுதியில் 13 தமிழரை உடனடியாக சேர்த்துக் கொள்ளும்படி ஜனாதிபதி ஆர். பிரேமதாசா உத்தரவிட்டுள்ளார்.

சுங்கப் பகுதிக்கு அண்மையில் சுங்க உதவி சேகரிப்பாளர் பதவிக்கு புதியவர்கள் பரீட்சைமூலம் தெரிவு செய்யப்பட்டபோது, பாகுபாடு காட்டப்பட்டதினால், திறமைசாலிகளுக்கு இடம்கிடைக்காமல் போய்விட்டதாகவும், இனவிகிதாசார அடிப்படையிலும் இவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை என்பதையும் ஜனாதிபதிக்கு சுட்டிக்காட்டப்பட்டதாம்.

மேற்படி புகார் நிமித்தம் ஜனாதிபதி எடுத்த உடனடி நடவடிக்கை காரணமாக 13 தமிழர்கள் மிகத்திறமை சித்தி பெற்றிருந்தது தெரியவந்துள்ளது.

இந்த 13 தமிழர்களையும் உடனடியாக சேவைக்கு அமர்த்தும்படி, ஜனாதிபதி சுங்க இலாகா அதிகாரிகளுக்கு உடனடி உத்தரவு பிறப்பித்துள்ளாராம். (வி)

# தென்பகுதியில் 125 மாணவர்கள் விசாரணையின்றி தடுத்துவைப்பு

(கொழும்பு)

தென்பகுதி சிறைகளில் விசாரணை எதுவும் அற்ற நிலையில் 125 பல்கலைக்கழக மாணவர்கள் தடுத்துவைக்கப் பட்டுள்ளனர்.

ஜே.வி.பி.யுடன் தொடர்பு கொண்டவர்களான இவர்கள் குற்றப்பத்திரம் தாக்கலின்றி தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். கடந்த ஒன்றரை வருடங்களாக இவர்கள் சிறையிலிடப்பட்டிருப்பதாகவும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (சி)

## பரீட்சைகள்

(யாழ்ப்பாணம்)

இணைந்த சேவைகள் பணிப்பாளரின் கட்டுப்பாட்டின் கீழுள்ள தமிழ் ஆங்கில தட்டெழுத்தாளர் சேவையின் II 'அ' பிரிவிற்குப் பதவியேற்றம் செய்வதற்கான தகுதிப் பரீட்சை ஜூன் மாதம் 15-ம் திகதி கொழும்பில் நடைபெற விருக்கிறது. (153)

0 0

(யாழ்ப்பாணம்)

நொத்தாரிசு பிரதம பரீட்சை ஜூன் மாதம் 29ம் திகதி கொழும்பில் நடைபெறவிருக்கிறது. (153)

## பென்ஷன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வெகு விரைவில் பென்சன் வவுச்சர்கள் ஓய்வூதியம் பெறுபவர்களின் விலாசத்திற்குத் தபாலில் சேர்க்கப்படவுள்ளன. (153)

## கத்தியால்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

ராவார்,

இப்பகுதியில் சைக்கிளில் வந்துகொண்டிருந்த போது திடீரென வழிமறித்த திருடர்கள் இவரை கத்தியால் குத்தி தாலிக்கொடியை அறுத்துச் சென்றுள்ளனர். (107)

## வேலணை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நண்பகல் 12-30 மணி தொடக்கம் மாலை 4-30 மணி வரை இப்பாடசாலைகள் நடைபெறும்

ஊர்காவற்றுறை கொத்தணிக்கு கீழுள்ள பாடசாலைகள் யாழ். மத்திய கல்லூரியிலும், வேலணை கொத்தணிக்குக் கீழ் இயங்கும் பாடசாலைகள் யாழ் வைத்தீஸ்வரா வித்தியாலயத்திலும், புங்குடுதீவு கொத்தணியின் கீழ் இயங்கும் பாடசாலைகள் யாழ் சன்மார்க்க வித்தியாலயத்திலும், மண்டைதீவு கொத்தணிக்குள் இயங்கும் பாடசாலைகள் யாழ். பெரியபுலம் மகாவித்தியாலயத்திலும் காரைநகர் நகர் கொத்தணிக்குக் கீழ் இயங்கும் பாடசாலைகள் யாழ். வண்ணை நாவலர் வித்தியாலயத்திலும் இயங்குவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

தற்போது பாதிக்கப்பட்ட இடத்திலிருந்து வேறு கோட்டங்களுக்கு இடம் பெயர்ந்த மாணவர்களும் ஆசிரியர்களும் அவர்கள் தற்போதுள்ள இடத்துக்கண்மையிலுள்ள கோட்டக் கல்வி அதிகாரியைச் சந்தித்து தமக்குரிய பாடசாலையைத் தெரிவு செய்து கொள்ளலாம்

இந்த ஒழுங்குகளை மேற்கொள்வதற்கு வேலணை கோட்டக் கல்வி அதிகாரியை பாடசாலை கொத்தணி அதிபர்களும் பாடசாலை அதிபர்களும், ஆசிரியர்களும் நாளை புதன்கிழமை காலை 10 00 மணிக்கு யாழ் மத்திய கல்லூரியில் சந்திக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்

இதேவேளை பண்டத்தரிப்பு கோட்டக்கல்வி அதிகாரி யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் யாழ்.பிராந்திய கல்விப் பணிப்பாளரை உடனடியாக சந்திக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்; (152]

# வீடுகளை பார்க்க சென்றவர் இராணுவத்தால் கைது

(புங்குடுதீவு)

சரவணைப் பகுதியில் உள்ள தமது வீட்டைப் பார்வையிடச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர், சிறிலங்கா இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதே இடத்தைச் சேர்ந்த நிதி என்னும் குடும்பஸ்தரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டவராவர்.

தீவுப் பகுதியில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து, அங்கிருந்து இடம்பெயர்ந்து யாழ் நகரில் தங்கியுள்ளோரில் சுமார் இருபத்தைந்துக்கும் அதிகமானோர் நேற்றுத் தமது வீடுகளைப் பார்வையிடச் சென்றனர் ஏனையோர் இராணுவத்தைக் கண்டதும் திரும்பி ஓடிவந்தது குறிப்பிடத்தக்கது (109)

## க. பொ. த.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வகுப்பில் கல்வி கற்று முடித்த மாணவர்கள் தொடர்ந்தும் க. பொ. த. உயர்தர வகுப்பிற் கல்வி கற்கத் தகுதி பெற்றவர்கள் தாம் கற்ற பாடசாலை அதிபர்களைச் சந்திக்குமாறும் அவர் கேட்டுள்ளார்.

பிற பாடசாலைகளில் கற்றுத் தாம் விரும்பும் பாடசாலைகளில் க.பொ.த. உயர்தர வகுப்பில் கல்வியை மேற்கொள்ள விரும்பும் மாணவர்கள், சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்கு விண்ணப்பங்கள் அனுப்பி இம்மாதம் 23ந் திகதிக்கு முன்பாக நடைபெறவுள்ள தெரிவுப் பரீட்சையில் தோற்றி அனுமதியைப் பெற்றுக்கொள்ளமுடியும்;

இவ்வனுமதிகள் பரீட்சைத் திணைக்களத்தால் நடாத்தப்படவுள்ள க. பொ. த. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் உறுதிப்படுத்தப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (152)

## பலாலியிலிருந்து ஷெல் வீச்சு

[யாழ்ப்பாணம்]

பலாலி முகாமிலிருந்து ஏவப்பட்ட 5 ஆட்லறி ஷெல்கள் பொன்னாலை மூளாய் பகுதிகளில் வீழ்ந்து வெடித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று மாலை 4-00 மணியளவில் இச்ஷெல்கள் இப்பகுதிக்கு அடுத்தடுத்து சில செக்கன்கள் இடைவெளிகளில் ஏவப்பட்டுள்ளது.

கடந்த 3 தினங்களாக பலாலியிலிருந்து இப்பகுதிக்கு ஷெல்கள் ஏவப்பட்டு வருவதும் தெரிந்ததே. (சி]

## அதிபர்கள் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் கோட்டப்பிரிவு கொத்தணி அதிபர்கள், தனியார் பாடசாலை அதிபர்கள், தேசிய பாடசாலை அதிபர்கள் ஆகியோர் பங்குகொள்ளும் கூட்டம் நாளை யாழ் கல்விக் கோட்டத்தில் நடைபெறும்.

உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.தியாகராசா தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் மூன்றுண்டு அபிவிருத்தித்திட்டம், அகதிகள் தங்கியுள்ள பாடசாலைகளின் பிரச்சனைகள், இரண்டாம் தவணையில் மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆராயப்படவிருக்கின்றன. (152)

## ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் இடம் பெயர்ந்து அகதிகளாகவாழும் இந்துசமய குருமார்களுக்கும், பூசகர்களுக்குமான ஒன்றுகூடல் நாளை புதன்கிழமை பி.ப 2 மணிக்கு கந்தர்மடம் குமாரசாமி வீதியிலுள்ள வேதாந்த மடத்தில் நடைபெறவிருக்கிறது (153)

## விடுதலைப்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வது முயற்சித்தால் அவர்கள் எங்களுடன் பேச்சு நடாத்த வேண்டுமென மற்றொரு புலிப் பிரமுகர் தெரிவித்ததாகவும் 'நியூஸ் வீக்' குறிப்பிட்டுள்ளது.

மேலும் பொருளாதார, எரிபொருள் தடையால் தமிழ் மக்கள் படும் துன்பங்கள் குறித்தும் இக்கட்டுரை விரிவாக குறிப்பிட்டுள்ளது. (சி)

## ஆகஸ்ட்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முதல் 18-ம் திகதி வரை நடைபெறும்.

5-ம் வகுப்புக்கான புலமைப் பரீட்சை ஆகஸ்ட் 5-ம் திகதி நாடுபூராவும் நடைபெறுமென்றும் பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது. (வி)

## காணாமல்போவோர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆசிய-பசுபிக் விவகார உப-குழுவிற்கு விடுத்துள்ளது.

மேற்படி சம்பவங்களுக்கு அதிகாரிகள் தரத்தில் தொடர்பேதுமுள்ளதா வென்றும் விசாரிக்கவேண்டுமெனவும் கோரப்பட்டுள்ளதுடன் இலங்கை படையினர் பெருமளவில் ஒழுங்கு முறையை கடைப்பிடிக்க வேண்டுமென்றும் அமைச்சு தெரிவித்துள்ளது. (சி)

## 16 சடலங்கள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது

விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்ட 16 சடலங்களையும் செஞ்சிலுவைச் சங்கத்தினரை பொறுப்பேற்குமபடி கேட்கப்பட்டதாகவும் ஆயினும் வவுனியாவில் தற்போது நடைபெற்றுவரும் விமானத் தாக்குதலையும் யுத்த நடவடிக்கையையும் காரணம் காட்டி செஞ்சிலுவைச் சங்கத்தினர் சடலங்களைப் பொறுப்பேற்பதில் தயக்கம் காட்டிவருவதாவும் தெரியவருகிறது. [க)

## வீர மரணம்

(வவுனியா)

கோழியாகுளம் பகுதியில் நேற்று முன்தினம் சிறிலங்கா இராணுவத்தினருடன் நடைபெற்ற மோதலில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த இரண்டு போராளிகள் வீரமரணம் அடைந்தனர்.

வீர மரணமடைந்த ஜெரா, ஜஜன் ஆகியோருக்குப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துள்ளனர். (க)

## விசேஷ கூட்டம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கொத்தணியின் கீழ் இயங்கும் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள், அதிபர்களுக்கான விசேட கூட்டம் நாளை புதன்காலை 9 மணிக்கு நடைபெறும் என பண்டத்தரிப்பு கோட்ட உதவிகல்விப் பணிப்பாளர் திரு.வி சண்முகராசா அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாண நகர எல்லைக்குட்பட்ட பகுதியில் தற்போது தங்கியிருக்கும் காரைநகரிலிருந்து இடம்பெயர்ந்துள்ள மாணவர்கள் அல்லது பெற்றோர்கள் தவறாது வருகைதருமாறும் முடியுமானால் வேறு இடங்களில் தங்கியுள்ள மாணவர்களும் வருகை தரலாம் என்றும் கேட்டுள்ளார்.

## துப்பாக்கி பிரயோகம்

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரத்திலுள்ள குவாறி என்னும் இடத்தில் வேலை செய்துகொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் மீது புலிகள் நேற்று துப்பாக்கிப்பிரயோக தாக்குதல் நடத்தினார்கள். (க)

## வவுனியா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து நான்கு மணி நேரம் நடைபெற்ற இத்தாக்குதலில் மேலும் பதினைந்து சிப்பாய்கள் படுகாயம் அடைந்துள்ளதாகவும் கொழும்பில் இராணுவ அதிகாரி ஒருவர் கூறினார். (க)

## மடுகோயில்

1-ம் பக்கத் தொடர்ச்சி)

வந்துள்ளது;

இதேவேளை, மடுக்கோயிலில் அகதி முகாம்களை நடத்தி வரும் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயத்தைச் சேர்ந்த இரு உறுப்பினர்கள், கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவர் திரு நாகேந்திரநாத் ஜாவைச் சந்தித்து இந்த நிலைமைகள் பற்றி எடுத்துக் கூறியிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## முள்ளை

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

நடவடிக்கை ஆரம்பிக்கப் பட்ட பொழுது இல்லாத எதிர்ப்பினை கடந்த மூன்று நாட்களில் இராணுவத்தினர் சந்திக்கவேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது

நேற்று முன்தினம் முதல் இப்பகுதிகளில் புலிகள் கடுமையான தாக்குதலை ஆரம்பித்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.


## மரண அறிவித்தல்

### வண. எல்.பீ.இராயப்பு O.M.I. S.T.D.

வண. எல். பீ. இராயப்பு O. M. I. S' T. D. அடிகளார் காலமாகிவிட்டார். 7-05-1991 செவ்வாய்க்கிழமை அன்னாரின் பூதவுடல் வைக்கப்பட்டிருக்கும் கொழும்புத்துறை புனித சூசையப்பர் ஆலயத்தில் காலை 6-00 — 7-00 மணிக்கு பூசைப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். காலை 11-00 மணி முதல் பிற்பகல் 2-00மணி வரை பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் மக்கள் அஞ்சலிக்காகப் பூதவுடல் வைக்கப்பட்டிருக்கும். பி. ப. 2-30 மணிக்கு புனித மரியன்னை பேராலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு 3-00 மணிக்கு பூசைப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். பி. ப 4-00 மணிக்குப் புனித சொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:

ஜே. எஸ். அழகையா,

(சி. 4709) எல். பீ. பிலிப், அ. பாலதாஸ்-

### திருமதி நடராஜக்குருக்கள் யோகாம்பாள்

சுழிபுரத்தைச் சேர்ந்த சுருவில் நடராஜக் குருக்கள் யோகாம்பாள் நேற்றிரவு சிவபதம் அடைந்துவிட்டார். இவர், சுருவில் ஐயனார் கோயில் நடராஜக் குருக்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சோமாஸ்கந்தக் குருக்கள். இராமகிருஷ்ண சர்மா, பத்மநாப சர்மா, பிரகதீஸ்வரன், வத்சலா (காஞ்சனா, சிங்கப்பூர்), வித்யா, வடிவாம்பிகை, வாலாம்பிகை, சபேஷன் (சுவிஸ்), யோகானந்தக் குருக்கள் (சுருவில்) ஆகியோரின் அருமைத் தாயாரும், இராசேஸ்வரி, ஜெகதீஸ்வரி, சோமாஸ்கந்தக் குருக்கள் (சிங்கப்பூர்), சத்யோயாத சர்மா (நீர்வேலி) சபாரத்தின சர்மா (சித்தன்கேணி), விமலா, கலாவதி (ஆவரங்கால்), ஸ்ரீதர சர்மா (சக்தி நூல் நிலையம், மட்டக்களப்பு), மைதிலி (சுவிஸ்), மாலினி ஆகியோரின் அன்பு மாமியாரும், சுப்பிரமணியக் குருக்கள், இரத்தினம்மா, அன்னம்மா, காலஞ்சென்றவர்களான பாக்கியம்மா, வைத்தீஸ்வர சர்மா ஆகியோரின் சகோதரியுமாவார்.

இறுதிச் சடங்குகள் யாழ்ப்பாணம் இல: 22 பிறவுண் றோட்டிலுள்ள அன்னாரின் மகன் இராமகிருஷ்ண சர்மாவின் இல்லத்தில் இன்று மாலை 3-00 மணிக்கு நடைபெற்று கோம்பையன் மணல் மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

இவ்வறிவித்தலை அனைவரும் தயவு செய்து ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்:

ந. யோகானந்தக் குருக்கள்

(சி 4710) (மகன்)

## சாவகச்சேரி - யாழ்ப்பாணம் மினிபஸ் சேவை

தினமும் காலை 7.15 மணிக்கு சாவகச்சேரி பஸ் நிலையத்திலிருந்து புறப்பட்டு கச்சேரி ஊடாக யாழ்ப்பாணம் சென்று ஆஸ்பத்திரிக்கு முன்பாக தரித்து நின்று பிற்பகல் 3.00 மணிக்கு சாவகச்சேரியை நோக்கிப் புறப்படும் என்பதை பேபி பஸ்சேவை மகிழ்ச்சியுடன் பொதுமக்களுக்கு அறிவிக்கின்றது.

மெ. அற்புதராசா

தபால்நிலைய வீதி,

[எ 1275] சாவகச்சேரி.


இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 68ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு மே மாதம் 7ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post office Lankaunder licence number B/166306/81.